



ஓலை 149| ஓசை 272| நவம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## வேங்கடசாமி நாட்டார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

## பொருள்

**பலரும் கேட்டு வெறுக்கப், பயனற்ற சொற்களைச் சொல்லுபவன், எல்லாராலும் இகழப்படுவான்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை!

பாவகை : இணைக்குறள் ஆசிரியப்பா




வயலில் காலை வகையாய் நீட்டிட
இயலா விதையா
வயலில் விளைந்து
நயமாய் மகசூல் ஈந்திடும்?
துயரென மின்னல் மின்னிடா
உயர்ந்த வானம் மழைப்பொழி யாதே!

மழைக்கு முன்பே மழைவரும் என்றே
விழைந்து மயிலும்
குழைந்தே ஆடும்;
தழைத்த கார்முகில் மழையைப்
பொழியும் முன்பே மின்னல்
அழைத்தே மின்னும் பாங்குணர்த் திடுமே!





யானை முன்மணி யோசை வருமே;
வானை விட்டு மழையும்
யானையாய் வரும்முன்
வானை விட்டு
மானைப் போல
வானில் துள்ளும் மின்னல் ஆகுமே!

**இலக்கணக் குறிப்பு:**
ஆசிரியப் பா வகைகளில் இணைக்குறள் ஆசிரியப்பாவும் ஒன்று. முதலடியும் ஈற்றடியும் நான்கு நான்கு சீர்களாக அளவடிப் பெற்று, இடையில் இரு சீர்கள் கொண்ட குறளடியும், மூன்று சீர்கள் கொண்ட சிந்தடியும் கலந்து வருவதே இணைக் குறளாசிரியப் பாவாகும். ஒவ்வொரு பாடலும் ஓரெதுகையும் மூன்று சீர்களிலும் நான்கு சீர்களிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனைப் பெற்றும் வரலாம். கட்டாயமில்லை. ஈற்றுச் சீரை ஏகாரத்தில் முடிக்கலாம்.

பாவகை: நிலைமண்டில ஆசிரியப்பா

பழுதிலா உறுதி பல்லுக்குத் தந்திடும்
பழுமர விழுதுகள் பலவும் தாங்கிடும்
அகல ஆலிலே அடங்கும் புட்களும்
அகத்தில் பூக்களை அடக்கி வைக்குமே
வயிரமாய் உறுதி வல்கமும் மருந்துமாய்
கயிறாய்த் தொங்கிடும் கனத்த வேர்கள்
தொங்கி ஆடும் தொன்மர மிதுவே
பொங்கி நின்றிடும் பொதிய மரமே.



கவிஞர் செ. கலைவாணி

# உலகம் உந்தன் காலடியில்



உழைத்திடப் பழகிடு
உயர்வும் உனதாகும்
தன்னம்பிக்கை கொண்டிடு
தனித்துவம் ஆகிவிடு

அயர்ச்சியின்றி பணியாற்று
ஆளுமையை வளர்த்திடு
சோம்பலை விட்டொழி
சோகமும் மறைந்திடும்

அச்சம் கொள்ளாதே
தடம்மாறிச் செல்லாதே
தடைகளை தாண்டிடு
எதுவும் எளிதாகும்

எண்ணங்களை ஒன்றாக்கு
வண்ணமயமாகும் வாழ்க்கை
எழுச்சி பெற்றிடு
எந்நாளும் உனதே

வஞ்சனை செய்யாதே
பொய்யுரைத்து வாழாதே
மெய்யும் மேன்மையாகும்
மேதினில் உயர்ந்திடு

ஈகையுடன் நல்கிடும்
உள்ளங்களும் சீராகும்
இல்லாதோருக்கு உதவிடு
இயலாதவரை அரவணைத்திடு

பெற்றோரைக் காத்திடு
பெருமையை பெற்றிடு
மூத்தோரை மதித்திடு
மூவுலகும் வாழ்த்திடும்

பண்பாடு மாறாத
பகுத்தறிவில் சிறந்திடு
பழமையை ஏற்றிடு
பைந்தமிழ் கற்றிடு

நன்மையும் நலமாகும்
நானிலமும் போற்றிடும்
உனது உயர்ந்த குணத்தால்
உலகம் உந்தன் காலடியில்

மறவாதே மறக்காதே
வீறுநடை போட்டிடுவாயே.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பிரச்சனைகள் நிறைந்த சமூகம்

சமுதாயத்தில் பல விதமான
பிரச்சனைகள் உள்ளது
அதற்கெல்லாம் தீர்வே கிடையாது
முதலில் சட்டம் ஒழுங்கல்ல
செய்யும் குற்றத்திற்கு தக்க
தண்டனை இல்லை
குற்றவாளிகளுக்கு உதவும் வகையிலே
ஒவ்வொரு காரியமும் நிகத்துகிறார்கள்
தினமும் எண்ணில் அடங்காத
குற்றங்கள் நடந்து கொண்டே போகின்றன
அதற்கெல்லாம் காரணம் லஞ்சம் மட்டுமே
கை நீட்டி பணத்தை வாங்கி
ஒரு செயலையும் சரியான முறையில்
செய்து முடிப்பதில்லை
கொலை, குற்றம் இல்லாத நாளேயில்லை
பிரச்சனைகள் நீடித்து கொண்டே போகிறது
அதற்கு தீர்வே கண்டறியப்படவில்லை.



கவிஞர் மோனீஷா

# உங்களில்...


சிறிது
தூரத்திற்குப்பின்
என் பயணம்
நிறைவடையலாம்.

வானில் வலம்
வந்த சூரியன் அந்தியில்
மொத்தமாய்
அடிவானில் மறையலாம்.

தன் தேடலை
முடித்தப் பறவைகள்
இனிதே
கூடு திரும்பலாம்.

இக் கவிதை
வாசிக்கப்படாமல்
சிலர் கடந்து போகலாம்.

உங்களில்
யாரேனும் ஒருவர்
இதே கவிதையை எழுதி
முடித்திருக்கலாம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உணவே மருந்து

உணவே மருந்தானால்
மருந்தே உணவாகும்
வீட்டுத் தோட்டம் தருமே
நல்ல விருந்து
கொடிய நஞ்சை அழித்திடுமே
சிறந்த உணவு
எமது உயிர் பிழைக்க வீட்டு
உணவை அருமருந்தாகிடுமே
உளநலம் உடல்நலம்
பாதுகாத்திடும் சக்தி உள்ள உணவு
நொறுக்கு தீனி நிலையில்லா உணவே
அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சாகிடுமே



வாழ்க்கை சுரங்கிட
உப்பை அதிகமாக உண்டிடலாம்
சூட்டை தணிக்க ஜீரணம் பெற
சிறந்த உணவே மருந்து
அனைத்துக்கும் மருந்தாகிடுமே
மருந்தென்ற உணவு


கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (கண்டி)

# ஊழ்வினைப் பயன்

உறுத்துவந்தே ஊழ்வினையும் யார்க்கும் ஊட்டும் ;
உருக்கொண்டே முன்செய்த வினையை நீட்டும்!
ஒறுத்திடலும் சிறப்புறலும் வினையின் பயனாம் ;
ஓர்ந்திட்டே தேடிவரும் இறைமை அருளால்!

வெறுமைசெயல் கொண்டோரும் வெற்றி கொள்வார் ;
விலையிலாதாய் உழைத்தோரும் தோல்வி காண்பார்!
நொறுங்கிட்ட பலர்வாழ்வும் மீண்டும் மலரும் ;
நோக்கிட்டால் ஊழ்வினையாய்க் கண்ணில் தெரியும்!



ஊழ்வினையால் நடக்குமென்றே சோம்பித் திரிந்தால்
ஓங்குபுகழ் உனைத்தேடி வருதல் உண்டோ!
ஆழ்மனத்தே நம்பிக்கை கொண்டே உழைப்பார்
ஐயமின்றி உயர்ந்திடலும் உண்மை தானே!

வாழ்வோரின் மனத்தளவே உயர்வும் எட்டும் ;
வாட்டத்தே மயங்கிநின்றால் மாண்பும் ஏது?
தாழ்வெதற்கு நல்உழைப்பு விதியை மாற்றும் ;
சலிப்பில்லா தொடர்முயற்சி எதையும் வெல்லும்!

கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

நுளம்பு தீண்டி பெருகும் பிணி
நொந்து வீழும் மக்கள்
நோவு நீக்கும் சாலை நிறைந்திட

நொறுங்கிப் போன வேந்து
நெடு வாடை இன்னல் நீங்க
நிமலன் முன்றில் கூடுகை.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# நட்பு

நட்பின் வடிவம்
நடைக்கு நெருக்கம்!
நடைவண்டி பயிலும்
தளிர்நடையில் தொடங்கி

நரைப்பருவக் கைத்தடியுடன்
தளர்நடை வரையில்
அகவை கடந்து கூட வரும் நட்பு!
கூடியே வரும் நட்பு!

குழிக்குள் இடும்வரையோ
குருதிச்சதையோடு எரியும் வரையோ
உறுதியுடன் துணை வரும்!
உவப்பையே உள்ளத்திற்குத் தரும்!

கண்டும் நட்பு! காணாதும் நட்பு!
நட்பில் இணைந்தவருக்கு
நடுவீதியும் அரங்கந்தான்!
நடுவீதியில் இருப்போருக்கு
நட்பே பெருஞ்சுகந்தான்!
காலச்சக்கரம் உருளுகையில்
உயர்வுப் பொருளாகும்
உள்ளன்பு நட்புதான்!

எதிலும் எதிர்நோக்காது
எதையும் பிறர்க்கீயும் நட்பு!
எதுவும் இல்லையெனினும்
என்புருவையே தரும் அன்புருவாகும்!
அதுவே உரமாகும் நட்பு!

உற்றார் உறவினர்
நட்பாகவும் மாறுவர்!
உற்ற தோழமையையே
உறவாகவும் மாற்றுவர்!



பெற்ற மகனையோ மகளையோ
உறவிலிருந்து நட்பாக
தோழமைக்கு மாற்றும் நட்புதான்!
தோளளவு வந்ததும் தோழமைதான்!

கடவுளரிடமும் நட்பு!
கடவுளுக்கும் மனிதருக்கும் நட்பு!
மனிதருக்கும் மனிதருக்கும் நட்பு!
மனிதருக்கும் உயிருள்ள அஃறிணைக்கும் நட்பு!
மனிதருக்கும் உயிரற்ற பொருளுக்கும் நட்பு!

நட்பின் எல்லை நாட்புறமும் நீளும்!
நாளும் சொல்லலாம் நட்பின் ஆழம்!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

நம்முடைய வாழ்வின்
வாசற்படிகளாய்
சமையலறை



அன்றைய சமையலறை
உணவுகள் ஆரோக்கியத்தின்
அடையாளங்களாய்

அம்மாவின் சமையல்
குடும்பத்தின் நலம்
பேணும் அக்கறையாய்

ஆனால் இன்றைய
சமையலறைகள் அலைபேசியின்
அழுத்தத்தில் அசிங்கமாய்

இன்று சமையலறைகள் இளமையுடன்
உடன்கட்டை ஏற உணவகங்கள்
உற்சாகமாய்

துரித உணவுகளின் ஊர்வலத்தால்
மரண செய்தியுடன்
சவப்பெட்டிகள் சந்தோஷமாய்

சமையல் மறந்த இன்றைய
தலைமுறையின் அலட்சியத்தால்
எதிர்காலம் நோய்களின் முகங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கையருகில் கடவுள்



உணர்வாலே காதலித்து
உள்ளத்திலே ஊற்றெடுத்து
உயிர் தந்து உருக் கொடுத்து
உருவாக்கிய ஈருயிர்கள்

கை தூக்கி கட்டியணைத்து
கரம் கொடுத்து கரம் பிடிக்க
மனம் கொண்ட மாதிரியே
வாழ்க்கை அமைத்து

அனைத்தையும் பெற்றவுடன்
பெற்றவரை மறக்கின்றோம்
உற்ற கடவுள் அவர்கள்
மறப்பதை மறுத்திடுவோம்

உருக்கொண்டு உயிரோடு
நடமாடும் பரம்பொருள்
பாராட்டி சீராட்டி சோறு ஊட்டி
போராடி வளர்த்திட்ட ஒளிவிளக்குகள்

போராட்டம் நிறைவுற்று முற்றுப்பெறும்போது
பார்த்திட மறுக்கின்றோம்
உயிர் தந்தவளை உயிராக உருக்கொடுத்தவனை
உணர்வாக உதிரம் கொடுத்து காத்திட வேண்டும்

உலகப் புகழெல்லாம் கொடுத்து
ஓய்வு பெற்று உறங்குகையில்
உன் மடி கொடுத்திடு
வேறென்ன வேண்டும் தெய்வங்களுக்கு

மாய உலகில் மர்மமாய் மறையும் வரை
மாரோடு அணைத்திடு தாயாய் மாறி

கலைஞர் சுஜிரேக்கா சுதாகரன் திருகோணமலை, இலங்கை

# இல்லறம்

இகத்ததில் உயர்ந்த இனிமையின் பந்தமே
சுகமும் தந்திடும் சுகந்த உறவிலே
தெரியாத சொந்தங்கள் தேர்ந்தேடுக்கும் நட்பே
புரியாத உறவாய் புதுப்புது முகங்களே

உறவுகள் புதிதாய் உண்மை நட்பைத்தேடி
மறக்காத சொந்தமாய் மண்ணில் தொடர்ந்ததே
பிறந்த வீட்டின் நினைவாய் புகுந்த வீட்டிலும்
சிறக்குமே என்றும் சிந்தனை மலர்ந்து

செழிப்பின் வளமாய் செழுமையை கூட்டி
உழைக்கும் பண்பில் உறுதியாகும் தொடர்ந்தே
மனதிற்கு இதமான மகத்துவ பேச்சிலே
இனம்பிரியா இசையாய் இகத்ததில் வளருமே



வாரிசை கொடுக்கும் வசந்த உறவில்
தெரியாத திசைக்கும் தேர்ந்திட்ட சுடராய்
வரங்கள் கொழிக்கும் வசந்த நட்பாய்
கரமும் கொடுத்து காக்குமே தினமும்


பண்பில் உயர்ந்து பகுக்கும் நலனில்
கண்ணும் கருத்துமாய் காக்குமே உறவுகள்
எண்ணிய பலனை எந்நாளுமே தந்து
தூணாய் காத்திடும் தூங்காது விழித்தே

அறிவுப் பெருக்கை அளவின்றி தந்தே
குறிப்பறிந்து கொடுத்து குறைகளையும் மாண்பாய்
பணிவு கொண்டு பாசத்தில் நிறைத்து
துணிவின் நிலையில் துடிக்கும் அறமாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# ஒப்பனை

இருக்கின்ற அழகை மெருகூட்டி வெளிப்படுத்த,
குறைவான அழகை பேரழகாய்க் காட்டிடவும்
உருவான கலைதான் ஒப்பனை என்றாகும்!
குறைகளை மூடி நிறைவாக வெளிப்படுத்தும்!
கூந்தல் அலங்காரம், ஆடை அணிகலன்கள்
விதவிதமாய் அணிதல், தொய்யில் எழுதுதல்,
நறுமணப் பொருட்களை பயன்படுத்தல் என்கின்ற
முறைகளெலாம் ஒப்பனையில் இருந்தனவே! இக்கலைக்கு
முறையான பயிற்சியுண்டு! அழகுணர்ச்சி கலையுணர்வு
ஒருசேர வெளிப்படுமே ஒப்பனைக் கலைதனிலே!
மாற்றங்கள் இதிலுண்டு காலத்திற் கேற்றார்போல்!
பெருங்கதையில் பெண்களின் ஒப்பனைகள் குறித்து
விரிவான விளக்கங்கள் இருப்பதைக் கண்டிடலாம்!
அலங்காரப் பொருட்களின் பட்டியலும் அதிலுண்டு!
பலவகை நாட்டியங்கள், நடனங்கள்,அதற்கேற்ப
விதவிதமாய் ஒப்பனைகள்! மறைந்த மாமனிதர்
பாத்திரங்களை திரையில் நம்கண்முன் நிறுத்த
உதவுவதும் ஒப்பனையே! கதாபாத்திரங்களின் வயது,
உணர்வு, தன்மை இதற்கேற்ப ஒப்பனையால்
உண்டாகும் பொய்முகங்கள்! பொய்யை மெய்யென்று
நம்பும் மனிதர்க்கு நிஜவாழ்வில் ஏமாற்றம்!
ஒப்பனையே இல்லாமல் உலவுகின்ற பொய்முகங்கள்
எப்போதும் பலவுண்டு! உள்ளத்தளவில் உண்மையற்ற
அணுகுமுறை, போலித்தனம் நிரப்பி இயல்பாகத்
தோன்றுவதாய் இருக்கின்ற மனிதர்கள் பலருண்டு!
மின்னுவ தெல்லாம் பொன்னல்ல என்கின்ற
உண்மையை உணர்தலே என்றைக்கும் நன்மைதரும்!




கலைஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# உன்னை நீ நேசி

பார்க்கும் கண்கள் பலவிதம் சொல்லும்
வார்த்தைகள் வீசி வதைக்கவும் செய்யும்
யார் நீ என்பது யாருக்குத் தெரியும்
ஊரார் கருத்தில் உடையாதே நீயும்

உன்னைநீ நேசி உளமாய் என்றும்
இன்பம் தானாய் இதமாய் பூக்கும்
நன்றாம் இதனை நாளும் உணர்ந்தால்
முன்னே போகலாம் முடங்காது வாழ்வும்



குறைகள் காணும் குற்றக் கண்கள்
கறைகள் என்றே கடந்து ஒதுக்கு
நிறைய இருக்கு நிசமாய் வாழ்வில்
மறையாய் மகிழ்வை மனமதில் செலுத்து

நேற்று வரைக்கும் நெருடிய யாவும்
தோற்றுப் போனது துள்ளி எழுந்ததும்
போற்றப் பழகு புதையும் துன்பம்
ஆற்றுப் படுத்த அழகே நீயும்

அடுத்தவர் கூற்றை அழுக்கெனின் அகற்று
தொடுத்திடும் நல்மனம் தோரணம் ஆக்கு
படுகுழி கவலையில் படுத்தென்ன செய்வாய்
கொடுத்தநல் வாழ்வை கொண்டாட வேண்டாமா

கலைஞர் பூர்ணிமா சங்கர்

என் தம்பி
தன் நிலத்தில்
நெல்
விதைத்தான்!
***

எவனோ வந்து
அந்நிலத்தில்
நெருப்பை
விதைத்தான்!
***

அப்போது
எரிந்ததோ
நிலமும் நெல்லும்
மட்டுமல்லவே.
***

எல்லோரதும்
வயிறுகளும் தான்
வாழ்க்கையும்தான்!



கலைஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம் (இலங்கை)

# வரம்

வேடிக்கை பார்க்கும் நபருக்கு
சாதரணாமாகதான் தெரியும்
நம் அன்பின் வெளிப்பாடு
அதை உணரும்
என் உணர்வுகளுக்கு
மட்டுமே புரியும்

தாயின் அன்பும்
தந்தையின் அரவணைப்பும்
இவ்வுலகில் வாழும்
ஜீவன்களுக்கு வரமென்று.




கலைஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# பொம்மை



அந்தக் குழந்தை
அந்த பொம்மையை
எந்நேரமும் கையில்
வைத்திருக்கும் அழகே அழகு

சில சமயம் தோளில்,
சில சமயம் தலையில்,
சில சமயம் ஒக்கத்தில்,

தூங்கும் போதும் பக்கத்தில்
விழிக்கும் நொடியில்
அதன் கைதேடும் முன்
மனம் தேடியதால் பொம்மையன்றி
அந்தக் குழந்தையை பார்க்க இயலாது!

குழந்தை தன் பொம்மையுடன்
சண்டையிடுவது; கவிதை!
சண்டையில் ஒருநாளும்
வெற்றி கண்டதில்லை!

தானே விரும்பித் தோற்று;
பொம்மையை ஆற்றுப்படுத்துவது
இன்னுமொரு காவியம்!

ஒருநாள்:
அத்தனை கொஞ்சலுக்கும்,
விஞ்சலுக்கும், மிஞ்சலுக்கும்;
ஈடு கொடுக்க முடியாமல்;
பொம்மை, ஒரு கண்ணையும்,
ஒரு கரத்தையும்,
தன் ஒரே வாலையும் இழக்க:

குழந்தையின் அழுகையில்
வீடு மொத்தமும் அலமலர்ந்து போக
புது பொம்மை ஒன்று
இன்று குழந்தையின் கையில்;
வீரிட்டு அலறி, குழந்தை
புது பொம்மையை நிராகரித்து;


தன் படுக்கையில் 'உறக்கத்தில்' ஆழ்ந்திருந்த
பழைய பொம்மையை ஆற்றுப்படுத்தி;
அதன் வாலையும் கையையும்
தனியே எடுத்து வந்து
'டாக்டர் தாத்தாவிடம்
ஆபரேஷன் பண்ணி
கொண்டு வாங்க'
என்று சொன்னது.

இவர்களுக்கு குழந்தை
சொன்ன விஷயம்;
அப்போது புரிந்தது
அதன் கனமும் கருத்தும் கூட

கலைஞர் சசிகலா விஸ்வநாதன்

# கண்ணீரின் விலை


தேக்கி வைக்கிறேன்
தேற்றிக்கொள்கிறேன்
தேம்பி அழாமல் சமாளிக்கிறேன்
கண்ணீர் விலைமதிப்பற்றது
என்பதால் மட்டுமல்ல
காரணமானவர்கள்
காகிதக்கப்பல் என்பதால்.



கிலைஞர் முனைவர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# மனதின் தேடல்

தேடல் இல்லாத
வாழ்க்கை இல்லை
முடிவின்றி தொடர்வதே
தேடலின் எல்லை
நான் யாரென்ற
மனதின் தேடல்
என்னைப் பற்றிய
அறிதலுக்கானத் தேடல்
முன்னோர் யாரென்று
உணர்தலுக்கானத் தேடல்
முன்வினை அறிந்து
அகற்றுவதற்கானத் தேடல்
இறைவனை நம்முள்
அறிவதற்கும் அறிந்து
நம்முள் தெளிவதற்கும்
உள்ளொளி ஒளிர்வதற்குமான
ஆன்மீகத் தேடல்
ஆழமானத் தேடல்
இந்த தேடலில்
முதலும் தெரியாது
முடிவும் தெரியாது
முடிவின்றி தொடர்வது
எல்லோர்க்குள்ளும் இந்த
மனதின் தேடல் அவசியமாகிறது



கலைஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கடற்கரையின் ரசிகை

வானுக்கும் மண்ணுக்கும் உறவுகொண்ட
யாவரும் இரசிக்கின்ற அக்கடலில்
தேய்பிறை நிலவோ தீர்ந்துவிட்டது
அமாவாசை இரவில்

நட்சத்திரங்களுக்கு பெரும் போட்டியாக
ஒளிரும் வெள்ளலைகள்
அலைகளோ பாறைகள் மீது
மோதும்போது எழும் ஓசையை
இசையாக நம்பி ஓய்வெடுக்கும் படகுகளோ
நங்கூர நடனமாடுகிறது

அடிக்கும் அலைகள் அடிக்கட்டும்
மிதக்கும் படகுகள்கனவுலோகத்தில் மிதக்கட்டும்
தன் இலக்கு மெய்ப்படும்வரை


நான் இரசித்ததோ கடலோ
படகோ அலையோ அல்ல

இதை நின்று இரசிக்க வைத்த
கடற்கரையைத்தான்



கலைஞர் ம. சந்தியா மனோகரன், சிவகங்கை

# கேட்டதும் கண்டதும் சுகமே!






அன்னைத் தமிழுக்குப் பெருமை தந்திடும்
அற்புத இலக்கியம் பலவற்றின் தொடக்கமாய்
முதலிடைக் கடையென முச்சங்கம் இருந்து
முத்தமிழ்வளர்த்த காலம்நம்
தமிழர்க்குப் பொற்காலமாமே!

சங்கத் தமிழின் இருகூறாய் அமைந்து
தங்கமாய்த் தமிழை ஒளிரச் செய்யும்
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்
நித்தமும் தமிழின் பெருமை பேசுமே!

ஐயிரு நூல்களைத் தன்னிடம் கொண்டு
பயன்தரு கருத்துகளைப் பைந்தமிழில் சொல்லிடும்
பத்துப்பாட்டி லொருபாட்டாய் பட்டினப்பாலை உண்டென
படித்தவன், பயிற்றுவித்தவன் என்றாலும் அடியேன்
படித்ததில்லையதை முழுமையாய் இன்றுவரை, ஏனோவறியேன்!

பட்டிணப்பாலை பற்றியோர் பேராசிரியர் இணையவழியில்
படபடவென பார்த்துப்பேசா தவராய்மனத்தில் இருந்ததைக்
கடகடவென எம்செவிகளில் பாய்ச்சிடயானும் ஆனேன்மீண்டும்
கல்லூரிக் கல்விபயில் கட்டிளங் காளையாய்!

பட்டினமென்பது பூம்புகாரென அறிவேனாயினு மதனொடு
பாலையென்பது ஒட்டியதெப்படி யெனவறிந்தது அவருரையால்தான்!
பாலையென்பது அன்பின் ஐந்திணையுள் ஒன்றாய்ப்
பிரிவையும் பிரிவின்நிமித்தமும் உணர்த்தி வந்ததென்பதை!
தலைவியைப் பொருளுக்காய்ப் பிரிவதைத்தள்ளிப் போடுமந்த
தலைவன் வளமுடைபூம்புகார்
அவனதாய்க்கிடைப்பினும் பிரியேனென்பதும்
கரிகாலனின் வீரமுமந்நகர் வாழ்மக்களின் வளவாழ்வும்
கேட்டயென்னைக் கவர்ந்தன வெனினும் அதிகமென்னைக்
கவர்ந்ததுவந்நகர் வாழ்வணிகரின் வணிகக் கொள்கையாம்
கொடுப்பதைக்குறையாய்க் கொடுக்காதுபெறுவதை
நியாயமாய்ப்பெற்று வணிகம்செய்ததே!
கேட்டதெனக்கு தெகட்டாதவினிப் பாயிருந்திட கூடுதலினிப்பாய்
கண்டேனெந்தன் யாதவர்கல்லூரிப் பேராசிரியர் இகேஆரை
கண்குளிரயிணை யவழிக்கூட்டமதில், யான்பெற்றபேறே பெரும்பேறு!

கலைஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

சிக்கிய பின்
சிந்தனை விழிக்கிறதே

தூண்டிலில்தான்
மீன் சிக்குமாமே

மீனின் விரிப்பில்
மாட்டியதோ மீளாமலே


மயக்கம் தந்த
மங்கையின் கண்களில்

வசீகரம் பூசியதாரோ
வச்சிரம் தந்ததாரோ

பார்வைகளின் சங்கமத்தில்
பதில் கிடையாதோ

பகீரென்ற இமையசைவிற்கு
பகல்களை பங்கிடலாமோ

எக்கணமும் சந்திப்போமா
இன்று சிந்திப்போமா



கலைஞர் இரஜகை நிலவன், மும்பை

உனக்காக பேசிய
உன் இரு கண்களில்
அசைவுகளை கண்டு

எனக்காக பேசிய
என் இரு உதடுகள்
அசையாமல்
ஒட்டிக்கொண்டது



கலைஞர் இரா. சங்கர், ஈரோடு

சில கேள்விகளுக்கு பதிலிருந்தும்
மௌனத்தை பதிலாக்கி
கடக்கும் கணங்கள்
எழுதப்படாமலே மனவேட்டில்
தவறென்று தெரிந்தும்
தட்டிக் கேட்க துடிக்கும்

அங்குள்ள தடைகளை தகர்க்க
வழியின்றி இயலாமை நிலையை
எழுத வழியற்று
சிரித்து நழுவும் நற்சிந்தனை
தொலையும் சுயநலம்

பெருகி வழியும்
சிநேகமாக தெரியும்
எட்டி வைத்து ஏளனக்கழிப்பில்
மின்னிடும் மாய மனிதர்களை
எழுதி தீர்த்திட ஆசைதான்



தோன்றும் எண்ணங்களை
மனதுக்குள் எழுதி எழுதி
அழித்தாலும் அழியாமலே
வெற்றிடத்தில் ஏக்கமாய்
எழுதப்படாத பக்கங்கள்

கலைஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

கோடித்துகள்களுக்குள்
குடியிருந்து கொண்டு
தேடி அலையச் சொல்கிறாய்.
நீரில் நிறைந்த ஆக்ஸிஜனாய்
நின்று விட்டு
சுவாசத்தில் கண்டறி என்கிறாய்.
காற்றாய் வெளியில் சுழன்று விட்டு
கண்முன் நிற்பதாய்
கண்ணாமூச்சி ஆடுகிறாய்.
வானமாய் விரிந்து நின்று
வாழ்க்கைக்குள்
ஒளிந்து விட்டதாய் தேடச் சொல்கிறாய்.
உயிரின் பெருநெருப்பில்
ஒன்றிப் போய்விட்டு
வேள்வி நடத்த வைக்கிறாய்.
அணுக்களைப் பிளந்து
ஆற்றலைக் கண்டவர்கள்
ஒவ்வொரு துகளின் உள்ளே
நீ இருப்பதை உணராது
உன்னைத் தேடி ஓய்ந்து போகிறார்கள்.



கலைஞர் இளையவன் சிவா

# இயற்கை அற்புதம்

இறைவன் மனிதனுக்கு
தந்த பேரருள் இயற்கை

பல வளங்களால் மிளிர
செய்தான் படைப்பாளனே

மன அமைதிக்கான
உறைவிடம் இதுவே

துன்பதுக்கும்
அருமருந்தாகிடுமே
இயற்கையே

கோபத்தில் அழிவையும்
தரும் சக்தி உண்டல்லோ

நதிகள் பாடல் இசைக்க,
தென்றல் காற்று இதமாக வீச

குயில் இசை கேட்க
கதிரவன் வெளிச்ச
பூ மாலை தூவ

தனிமையின் இரகசியம்
இதுவே.

கற்பனையில்
வரிகள் தந்திடும்
கவிதையும் இதுவே



இயற்கை அன்னை
எமக்கு தருமே இன்பத்தை

எழில் கொஞ்சும் அழகை
வர்ணிக்க வார்த்தையில்லையே

படைப்பளனுக்கே
பல கோடி நன்றிகள்
உரித்தாகுமே

கலைஞர் முர்ஷிதா பேகம், அக்குறணை (கண்டி)

அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில்
அபிராமி அம்மன்
திருக்கடையூரில் வீற்றிருக்கிறாள்
அபிராமி பட்டர் அந்தணர் ஆவார்
அபிராமியின் அருளால்
நூறு பாடல்களை பாடியவர்

அபிராமி பற்றி அபிராமியை நினைத்து
தியானத்தில் ஆழ்ந்து
தியானத்தில் இருக்கிறார்

அணுவை அசைப்பவள் சக்திதான்
இவ்வுலகம் இயக்குவது சக்திதான்
தை அமாவாசை மறந்து
பௌர்ணமி என அபிராமி பட்டர்
சொல்லிவிட்டார்



அபிராமி பட்ட நூறாவது பாடல் பாடியதும்
அபிராமி அம்மன் பௌர்ணமி நிலவாக
காட்சி தருகிறாள்
கடைக்கண் திறந்து பாரம்மா
அபிராமி அந்தாதி பாடலை
படிக்கும் போது
உடல் சிலிர்த்து உள்ளம் பூரிக்கும்

அம்மனை பக்தி பாடலால் வணங்கும்போது
ஆணவம்,கன்மம்,மாயை
நிச்சயம் வேரோடு அழியும்
கலியுகத்தில் அம்மனின்
திருப்பாதத்தில் சரணடைவது சாலச்சிறந்தது

அபிராமி அந்தாதியின்
ஒவ்வொரு பாடலுக்கு மகிமை இருக்கிறது
வாழ்வில் நிறைவேற்றித் தரும்
அன்னையானவள்

கவிஞர் மா. நந்தினி, சேலம்

# சூரிய உதயம்



வெய்யோன் உலகையே
விழித்தெழ செய்யும்
ஒரு அற்புத படைப்பே!
ஒவ்வொரு உயிர்களும்
உயிர்ப்புடன் செயல்படும்
ஒரு சாதனமே!

உயிர்கள், தாவரங்கள் எல்லாமே
அவனின் ஒளியில் வந்ததே !
சூரியனிடம் இருந்து
ஒளி வாங்கியே
சந்திரன் மிளிர்கிறதே !

எல்லா கிரகங்களும் சூரியனை சுற்றியே!
சந்திரனை கண்டால்
அல்லி மலரும் மலர்வதைப் போல்,
சூரியனைக் கண்டால் தாமரை
பூவும் மலர்கிறதே !

ஒரே நாள் மேகங்கள் ஊடே
நீ மறைந்து இருந்தாலும்
ஒளியின் மந்தகாச
புன்னகைப் போல லேசான
ஒளி கீற்றுகளே!
உன்னை சுற்றியே எல்லா கிரகங்களுமே!

ஓ! ஆதித்தனே,
அற்புதம் தரும் வல்லவனே!
கமலத்தை மலரச் செய்யும்
கமலநாதனே!

பாஸ்கரனே நீ இருக்கும் இடத்தில்
வைத்தியன் தேவை இல்லையே!
மனிதனின் உடம்புக்குள் விட்டமின்
சக்தியை தருபவனே!

ஏழு வண்ணங்களிலும்
ஏழு கிழமைகளிலும் வருபவனே!
நவகிரகங்களின் நாயகனே!
மும்மூர்த்திகளின் அருளை பெற்றவனே!

காலம் காலமாய் சுழன்று கொண்டே
இரவையும் பகலையும் மாறி மாறி தந்து

வாழ்க்கையை ஒளிர செய்பவனே!
ஜாதகத்தில் தந்தைக்கு உரிய இடமாக வருபவனே!
புற நிற ஊதாக் கதிரை தருபவனே!
நீர் இல்லையெனில் இவ்வுலகம் இல்லையே !

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அழகே!

பகல் பொழுது சூரியனின்
பகிர்ந்திடும் ஒளியழகே
பங்கமில்லா இயற்கையிலே
பகையில்லா கொடையழகே!

பசும்பல்வெளியிலே
பனித்துளி நிற்கும் பேரழகே
பச்சைப் போர்த்திய மலைமுகட்டிலே
பஞ்சாய் பொதி மேகங்களும் அழகே



பசுக்கள் மேயும் வயல் வெளியிலே
பசுங்கன்றின் பாசமும் அழகே
பணி செய்யும் உழைப்பாளரின்
பணிவன்பான மரியாதையும் அழகே

பழைய பழக்கங்களிலே தமிழரின்
பண்பாடும் கலையழகே
பதமாக இனிக்கவே கனியும்
பழங்களின் வண்ணமழகே

பந்தமாக உறவுகள் கூடவே
பந்தலிட்டு விழாவும் சிறப்பழகே
பயமில்லாமல் வானில் திரியும்
பறவைகளின் ஒழுங்கும் அழகே

பருவத்திற்கு பருவம் காய்க்கும்
பல்வேறு காய்களின் சத்தும் அழகே
பலுவான சுமை தூக்கும்
பலசாலி கூலி தோழர்கள் வியர்வை அழகே

பழம் புராணாங்களின் தமிழ் உருக்கள்
பலமான கல்வெட்டும் சொல் அழகே
பள்ளிச் செல்லும் பிள்ளைகளின்
பட்டாம்பூச்சியாக பறந்து செல்லும் அழகே

பற்றோடு ஒன்றோடொன்று பிணைந்த
பரத நாட்டில் எல்லாமே அழகே
பரந்த வெளி பார்த்து
பரவசமாகும் நல் மனித மனசும் அழகே!


கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# பூவும் வண்டும்

தேன் தேடும் வண்டு
பூவோடு காதலுற
கவிப்பாடும் மலரோ
மணமாய் மகிழ்ந்து
வண்டு வருமென காத்திருக்க
வண்டு வந்துது
வேறொரு பூவின் மயக்கத்தில்
பூ மலர்ந்து வீயென மடிந்து
புவியோடு கலந்ததை
வண்டு உணருமோ
உணராமலே காணாது போகுமோ



கவிஞர் சு. கார்த்திகா, பழநி



உன் விழி மோதி உடையும்
மூச்சுக்காற்றாய் மாறிடத்தானே
என்னிதயம் துடிக்கிறது!

வேள்வித் தீயாய்ப் பரவும்
உன் மாயப் புன்னகையில்
என் காதல் பிறந்தது!

என்னைக் கொல்லும்
மோகத்தின் நெருப்பு
உள்ளும் புறமாய் எரிப்பது அறியாமல்
இதழில் தீவைக்கும் மின்சாரம் அனுப்பி
சோதனை எலியாய்
என்னைச் சோதித்துப் பார்க்கிறாய்.

விடைதெரிந்த வினாவாக நீ
பதில் புரியாத பைத்தியமாய் நான்
இருவருக்குமிடையில் நொண்டியடித்தபடி காதல்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

புன்னகை சிந்தும் பூவிழி கன்னம்
புத்துயிர் ஊட்டும் பச்சை வண்ணம்
இதயத்தின் சத்தம் மகிழ்வின் உச்சம்
இனிமையாய் கேட்கும் இயற்கையின் அற்புதம்

கண்மணி கைபட்டு சிரிக்குது பொன்வண்டு
காலடி மிதிப்பட்டு கொஞ்சுது புலலொன்று
தென்றல் தொட்டு சிலிர்க்குது தேகமொன்று
மலைச்சாரல் கேட்டு இசைக்குது பாட்டொன்று

விவசாயம் செழித்திட விவசாயியாய் மாறினாயோ
வையகம் வாழ்த்திட நாடாள பிறந்தாயோ
நன்மக்கள் நலவாழ்வு நிறைந்திட நினைத்தாயோ
நாளைய உலகம் நீயென உரைத்தாயோ!

இயற்கையோடு இனியொரு விதி செய்வோமே !
உன்னால் தொடங்கட்டும் விவசாயம் பெருகட்டும்.



கவிஞர் இரா. மகாகிருஷ்ணன், மயிலாடுதுறை

தாமதமாகும்
ஒவ்வொரு
வெற்றியும்
முயற்சியின்
பின்னால்
ஓடுகிறது


அவசரமாகும்
ஒவ்வொரு
தோல்வியும்
அனுபவத்தின்
பின்னால்
ஓடுகிறது

தொடர்
ஓட்டத்தில்
ஒருநாள்
அவசரமாகும்
தாமதம்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

செவிக் கிழியும்
ஓசை யெழுப்பும்
அதிவேகப்
பயணத்துக்கான
புதிய ஈரடுக்கு பாலம் என
தெரிந்திருக்க
வாய்ப்பில்லைதான்
கூடு கட்டியிருக்கும்
புறாகளுக்கு.



கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

## யாரிடமிருந்து?


செயலுக்கான
'ஆலோசனைகள்'
'யுக்திகள்'
'அனுபவ பகிர்தல்'
'நிதானம் காத்தல்'
'பொறுமை கடைப்பிடித்தல்'

உறவுகளிடத்தும்
நட்பு வட்டத்திலும்
அறிந்தவர்களிடத்திலும்.

'இலக்குநிர்ணயம்'
'காலக்கெடு'
'திட்டமிடல்'
'இலக்கை நோக்கிய செயல்பாடு'

நம்மிடம்.

****



## நினைவுச் சுமைகள்

வீடு நுழைந்தவுடன்
ஏன் அதற்கு முன்னரே
முகமலர்ச்சி உள்ளத்து உவகை

ஆண்டுக் கணக்கில்
உலாவிய இடங்கள்
கடந்த நிகழ்வுகள்
பழகிய பேசிய
தோழமைகள்
மனவெளியில்
நீண்ட நடைப்பயணத்தில்

நேரம் ஆகஆக
இன்னும் 6 மணி
5 மணிநேரமே
இதோ கிளம்பும்
நேரம் வந்துவிட்டது

வாகனத்தில்
ஊர் எல்லை கடக்கும் வரை
ஓயாத எண்ண அலைகளாய்
சொந்த மண்ணின் தாக்கம்

நினைவுச் சுமைகளாய்
அடுத்த வாரவிடுமுறையில்
இல்லம் வரும்வரை.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

குல்லகம் - வறுமை.
கோடியில் புரல்பவனிடமும்
ஏதோவொரு வகையில்
இருக்கத்தான் செய்கிறது
குல்லகம்.

பரிதாபம் யாதெனில்
மனத்தால் மாற்றுத் திறனாளியான நாம்
மாற்றுத் திறனாளிகளைப்
பார்த்து பரிதாபப்படுவதுதான்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# விலகல்

வேஷங்கள்
விலகாதிருந்தால்
நிஜங்களை தரிசிப்பது எப்படி?

இமைகள்
விலகாதிருந்தால்
உலகை காண்பது எப்படி?

உயிர்
விலகாதிருந்தால்
நினைவுகளில் வாழ்வது எப்படி?

மலர்கள்
விலகாதிருந்தால்
மொட்டவிழ்ப்பது எப்படி?



மண்
விலகாதிருந்தால்
வேர்கள் வியாபிப்பது எப்படி?

மேகம்
விலகாதிருந்தால்
நிலவினை ரசிப்பது எப்படி?


தான்
விலகாதிருந்தால்
அன்பில் திளைப்பது எப்படி?

பேதங்கள்
விலகாதிருந்தால்
மாண்புகள் காப்பது எப்படி?

கர்பத்தில் சிசு
விலகாதிருந்தால்
ஜனனம் நிகழ்வது எப்படி?

விலகல்
ஒரு இயற்கை விதி
உன்னத நிகழ்வின் உச்சம்!

கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி



மனிதனுக்கு உடல் ஆரோக்கியம் அவசியம் என்றாலும், அதற்கு மேலான ஆற்றல் மனத் தைரியம்தான். மனத் தைரியம் இருக்கும் வரையில் நம்பிக்கை உயிரோடு இருக்கும். ஆனால் அந்த நம்பிக்கையே இழந்துவிட்டால்? மனிதன் தன்னையே இழந்துவிட்டான் என்பதே உண்மை. அது அவர் அறியாத மறைக்கப்பட்ட மனநோய் போலே மெல்ல மெல்ல அவனை சிதைக்கத் தொடங்கும். வலிகள் ஒவ்வொன்றாக தாக்கம் கொடுக்கும் போது, தோல்வி நம்மை உடைத்தாலும், வாழ்க்கை சாதாரண விஷயங்களில் மறுமுறை முயலுவதற்கான வாய்ப்பைத் தருகிறது.

ஆனால்... பாசம் என்ற ஒன்றில் தோல்வி அடைந்தால்? அது மனிதனை வேரோடுக்கும். அவன் எதிர்பார்த்த அன்பு அவனை விட்டு விலகும் போது, வெறுமையின் உளைச்சலில் தன்னை தானே மாற்றிக்கொள்ள முடியாத ஒரு மனப்பித்தில் சிக்கிக்கொள்கிறான். அந்த நிலை என்ன செய்வது? வெளிவரத் தெரியாமல், அவன் அவனையே இழப்பதில் சாந்தியைக் காண முயல்கிறான்.

உயர்வு, சாதனை, திறமை இவை அனைத்தும் ஒருவரின் உடனிருக்கும் அக்கறை கொண்ட ஒரு தோளின் உறுதிப்பாட்டால் அதிகரிக்கிறது. கரகோசம், ஊக்குவிப்பு, நம்பிக்கை இவற்றின் பின்னணியில் சாதனைகள் பிறக்கின்றன.

ஒரு முறை மேடைக்கு ஏற பயந்த ஒருவர், அந்த ஊக்க குரலின் சக்தியில் தன்னை வலுவாக்கி, அடுத்த முறை தயக்கமின்றி மேடையை

கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)


அடைவார். ஆனால் மனித மூளை... உலகத்தை மாற்றக்கூடிய வலிமை கொண்டது ஆனாலும், அன்பின்மை என்ற ஒரு பிளவு அந்த மூளையை சிதறடிக்க வைக்கும்.

கனவுகளோடு வாழ்ந்தவன், பாசத்தால் பிழைத்தவன், அந்த பாசம் உடைந்த தருணத்தில்... கனவையும் துறந்து, தன்னையே இழந்து போகும் நிலைக்கு செல்வான்.

அங்கே தான் கேள்வி எழுகிறது: அவன் மீண்டும் எழுவதற்கான ஒளி எங்கே?

அழுது தீர்த்தாலே வலி தீரு

பேசி தீர்க்க சிறந்த நட்பேனும் அவசியமாகிறது.



தேடலாகும்..

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

நெய்லி தொலைபேசியில் தொடர்பு கொண்டு "எந்த அளவில் போய்க்கொண்டிருக்கிறது ?" என்று கேட்டாள்
"ம்..ம்... ஏரக்குறைய நெருங்கி விட்டோம் என்று தான் நினைக்கிறேன். ஆங்... நெய்லி.. எனக்கு கொஞ்சம் பணம் வேண்டுமே?" என்றான் நரேன்
"ஏய் எப்ப பாரு பணம் கேட்டுக்கொண்டிருக்கிறாய். அப்படி உனக்கு என்னதான் செலவு இருக்கிறது? நான் என்ன பணம் காய்க்கும் மரமா என்ன? இங்கே வேலை செய்து உனக்கு செலவிற்கே பணம் அனுப்ப போதுமென்று சலிப்பு தான் தட்டுகிறது"
" நீ ஒன்றும் சும்மா தர வேண்டாம்"
"ராஜா நரரேந்திர பிரபு நெறைய சொத்து சேத்து வச்சிருக்காரு. ஓ...அத வித்து பணம் தரப்போறாராக்கும்"
" அதான் கோடிக்கணக்கிலே வரப்போகிறதே. அதிலே திருப்பித் தந்து விட்டுப் போகிறேன்" என்றான் கேலியாக சிரித்துக் கொண்டே.
"ஆமா போய் இரண்டு வாரமாகப் போகிறது. இன்னும் நுனி வாலைக்கூட பிடிக்க துப்பில்லை"
"ஓகோ... பாரு. நீ அந்த வெளி நாட்டுக் கம்பெனி காரன்கிட்டே சொன்ன உடன்படிக்கை மாதிரி நான் இந்த மாசக் கடைசிக்குள்ளே அந்த செடியோட வர்றேன். அந்த நாலு கோடி ரூபாயும் வாங்கி மொதல்ல உன் கடனைத்தான் திருப்பிக் குடுக்கப் போறேன்"
சரி, சரி சீக்கிரம் காரியத்தை சாதிக்கப் பாரு. நான் இந்தியா நேரத்திற்கு சரியா ஏழு மணிக்கு கூப்பிடுகிறேன்"
"ம் சரி சரி" என்று அவன் பேசி முடிப்பதற்கும், வசந்த் காரில் கண்ணனை விட்டு விட்டு வருவதற்கும் சரியாக இருந்தது. வசந்த்" ஏறிக்கோ நீ சொல்லு, நான் ஓட்டுகிறேன்" என்றான்.
நரேன் வண்டியில் ஏறிக்கொள்ள, அலை பேசியை அவன் கையில் கொடுத்து, "இது காட்டுகிற வழியிலே போ" என்றான்.
வசந்த் வண்டியை ஓட்டிக்கொண்டே, "இன்னும் எத்தனை நாள் தானிந்த காட்டிற்குள் அலைய போகிறோமோ?" என்று சலித்துக் கொண்டே வானொலியை திருக்கினான்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் 'கம்பன் ஏமாந்தான்' என்று பாட ஆரம்பித்தார். " இளங்கன்னியரை ஒரு மலர் என்றானே.. கற்பனை செய்தானே..." என்று வசந்த் தொடர்ந்தான்

"என்னடா.. கவிதா ஏதாவது சொன்னாளா?" நரேன் சிரித்தான் "ஏம்பா பாட்டு கூட படிக்க கூடாதா?"

"படிக்கலாம்... படிக்கலாம்... சரி. நாம இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. வண்டியை நிறுத்து" என்றான் நரேன்.

வசந்த் வண்டியை அருகிலிருந்த மர நிழலில் நிறுத்தி விட்டு கீழே இறங்கினான்.

"பாரு. நாம் வண்டியை இங்கே விட்டு விட்டு நடக்கலாம்" என்றான் நரேன்

"கண்டிப்பா நாம் இங்கே வண்டியை விட்டு இறங்கி விட்டோம் எனபதை பிரபு கண்டிப்பா பார்த்திருப்பார்" வசந்த் இறங்கி அருகிலிருந்த மரத்தில் இருந்த மரத்தில் அமர்ந்திருந்த புறாவை மறைத்துக் கொண்டே நின்றான்.

சிரித்துக் கொண்டே நரேன்" வசந்த். புறாவை இரசிப்பதற்கு எல்லா நேரமும் சரியில்லை. நீ சும்மா புறாவை மறைக்கிறதாலே நான் பரர்க்காமல் இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்காதே... வா... அததுக்கு நேரமிருக்கு..." என்று முன்னால் நடந்தான் நரேன்.

"நேரம் என்னப்பா ஆகுது"? என்றான் நரேன்

" நாலு முப்பது"

"சரி சீக்கிரம் நட... இன்னும் ஒரு கிலோ மீட்டர் நடக்கணும்" வேகமாக நடக்க ஆரம்பித்தான் நரேன்

எதிரே வந்து கொண்டிருந்த சீறுடை அணிந்த காட்டிலாகா அதிகாரி, திலக்," எங்கேப்பா தம்பிகளா போறீங்க?" என்று கேட்டார்.

"சார். நாங்களும் காட்டிலாகாவிலிருந்து தான் வந்திருக்கிறோம் ஒரு மருந்து செடி இங்கே கிடைப்பதாக அறிந்து அதை தேடி வந்திருக்கிறோம்" என்றான் வசந்த்.

"சரி.. அடையாள அட்டையைக் காட்டுங்கள்"

"நரேன். நான் ஐ கார்டை வண்டியிலே என் பர்சோட போட்டுட்டு

வந்துட்டேண்டா.. உன்னுடைய ஐ கார்டைக்காட்டு " என்றான்
நரேன் தன் பையிருந்த அடையாள அட்டையை எடுத்துக் காட்ட "அஞ்சி மணிக்கு மேலே எல்லாம் இந்த காட்டுக்குள்ளே சுத்தக் கூடாது தெரியுமில்லியா?. "போங்க... போயிட்டு நாளைக்கு வாங்க.." என்றான். உடனே வசந்த் பிரபுவிற்கு போன் செய்து, " சார். பிரபு சார் உங்ககிட்டே பேசணுமாம்" என்றான்.

திலக்,"யாரு. புதுசா வந்திருக்க ஆபீசருங்களா... குடுங்க.." என்று அலைபேசியை வாங்கி, "சார் சொல்லுங்க. ஆங்... இங்கே உங்க ஆட்கள் ரெண்டு பேர் இவ்வளவு லேட்டா சுத்திக்கிட்டிருங்காங்க.. இங்கே சிங்கம், புலி, யானை, எருமையெல்லாம் நடமாடுகிற இடம். எதாவது கொடிய மிருகம் இவங்களை ஏதாவது பண்ணிச்சின்னா யார் பொறுப்பெடுத்துக்கிறது... போயிட்டு நாளைக்கு காலையிலே வரச்சொல்லுங்க..." என்றார்

பிரபு என்ன சொன்னார் என்று புரியவில்லை. வசந்த் கையிலெ அலை பேசியை வாங்கி,

"சார். இங்கே பக்கத்திலே தான் போகிறோம். சீக்கிரம் திரும்பி விடுவோம். நீங்க அவர்கிட்டே சொன்னீங்கண்ணா எங்களை போக விடுவார்" என்றான்

எதிர் முனையிலிருந்து பிரபு, " வேண்டாம் வசந்த். திரும்பி வந்து விடுங்கள். வீண் பிரச்சினைகள் வேண்டாம்" என்றார்

நரேன் வாங்கி, " சார் ஒரு அஞ்சி நிமிடத்திலே வந்து விடுவோம் கொஞ்சம் போக விடச் சொல்லுங்கள்" என்றான்.


எதிர் முனையில் பிரபு, " சரி. அவரிடம் கொடுங்கள்" என்று சொல்ல சார். பிரபு சார் உங்க கிட்டே பேசணுமாம்" என்று அலை பேசியை அவரிடம் நீட்ட, திலக் , " ஓஒஓஒஓஒஓஒஓ செத்தோம்.. "என்று அலறினார்.

வசந்த் திரும்பிப்பார்க்க.. எதிரே யானைக் கூட்டம் நடந்து வந்து கொண்டிருந்தது மெதுவாக...

**தொடரும்...**

கவிஞர் இரஜகை நிலவன்

## கட்டுரைத் தொகுப்பு - இரஜகை நிலவன்




உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி ஆரம்பத்தில் செய்யுள் வடிவிலேயே பேசப்பட்டு வந்தது. இலக்கியமும் தத்துவமும் நூல்களும் செய்யுளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. உரைநடை என்பது இருபதாம் நூற்றாண்டில் துவங்கி இன்று வளர்ச்சி பெற்ற ஒரு வடிவமாக தமிழில் விளங்கி வருகிறது. அந்த வகையில் நீதிநெறி விளக்கங்கள், வாழ்வியல் நெறிபாட்டு முறைகள், தமிழ் மொழியின் பெருமைகள், தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழுக்கு செய்த தொண்டு என பல்வேறு தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் எழுதப்பட்டு அவை நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

உரைநடை வடிவம் மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு முக்கியமாக உதவி செய்கிறது. பகுப்பாய்விற்கான சிறந்த வடிவமாகவும் விவாதித்து விவரிப்பதற்கு எளிதான கட்டமைப்பாகவும் ஒரு பொருள் பற்றியும் நிகழ்வைப் பற்றியும் சிந்தித்து அதை ஒழுங்குபடுத்துவதற்கு கட்டுரை வடிவமே சிறப்பானதாகவும் அமைகிறது. கட்டுரையின் அமைப்பை எண்ணுகையில் பொருள் ஒழுங்கு, சொற்செறிவு, வாக்கிய அமைப்பு, குறியீடுகளின் பயன்பாடுகள், அவற்றை எந்தெந்த இடங்களில் பயன்படுத்துவதன் நோக்கம், பத்தி அமைப்பு, பத்தி பிரிப்பதன் முறைகள் என பல்வேறு பிரிவுகள் கட்டுரைத் தொகுப்பில் காணப்படுகின்றன. அந்த வரிசையில் இந்த நூலில் எழுதப்பட்டு இருக்கும் ஒவ்வொரு கட்டுரைகளும் கட்டுரைகளின் தலைப்பை திறம்பட எடுத்தியம்புகின்றன.

தொல்காப்பியர் காலம் முதல் அண்மைக்காலம் வரை எவரும் துணிந்து செய்யாத சொற்பிறப்பு என்னும் வேர்ச்சொல் ஆராய்ச்சியில் உலக அரங்கில் தன்னிகரற்று விளங்கியவர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆவார். இவரது "மொழி நூல் கட்டுரைகள்" தொடர்பான முதல் கட்டுரையில் பாவாணர் அவர்களின் தமிழ்த் தொண்டு திறம்பட விவரிக்கப்பட்டுள்ளது. திராவிடம் என்ற அமைப்பில் இருந்து இன்றைய தமிழ் மொழியின் நடைமுறை வரை தமிழை அவர் ஒழுங்குப்படுத்தி இருக்கும் விதத்தையும் தமிழுக்கான அவரது தொடர் ஆராய்ச்சி முயற்சிகளையும் இந்தக் கட்டுரை விரிவாக எடுத்தியம்புகிறது. சொல் ஆராய்ச்சி செய்ய விரும்புவோர் மொழியின் இலக்கணத்தை கற்பதுடன் அதில் உள்ள சொற் குடும்பங்களை எல்லாம் தனித்தனியாகவும் தொகுதி தொகுதியாகவும் நோக்கி அவற்றின் தொடர்புகளை அறிந்து கொள்ளுதல் முதல் அவசியம் என்பதை மொழி ஆய்வு செய்பவர்களுக்கு வலியுறுத்தும் தேவநேயப் பாவாணர் குறித்த கட்டுரையில் கருத்தறிவிப்பு கல்வியறிவு அலுவற்பேறு மொழிநூல்பயிற்சி விருப்பம் என்னும் ஐந்து காரணங்களால் மக்கள் மொழியை பயின்று உணர்ந்து கொள்கிறார்கள் என்பதையும் விவரிக்கிறார். இலக்கண இலக்கிய புலமை நிறைந்த தமிழ் மொழியில் அந்நியர்களின் ஊடுருவல் காரணமாக நாகரீகம் கலாச்சாரம் அழிக்கப்பட்டு பிறமொழி கலப்பு ஏற்படுகையில் கலாச்சார மாற்றங்களும் நிகழ்ந்து மொழியின் தன்மையை மாற்றி அமைக்கின்றன. அப்பொழுதும் தனித்தமிழை தலைதூக்கி நிற்கச் செய்து அதன் பெருமைகளை உலகறியச் செய்த தேவநேயப் பாவாணரின் தமிழ்த் தொண்டை முதல் கட்டுரை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

நூலில் நிறைய கட்டுரைகள் தன்னம்பிக்கை உரையாக அமைந்து ஒவ்வொருவருக்கும் வெற்றியின் விலாசத்தை அறிமுகம் செய்கிறது. தனது வெற்றியைத் தானே திட்டமிடும் தைரியமும் உழைப்பும் ஒவ்வொருவருக்கும் உள் மனதில் மிகப்பெரிய நம்பிக்கையை விதைத்து விடுகிறது. அதுவே அவர்களுக்கான புதிய பாதைகளையும் அமைக்கிறது. மூடத்தத்துவத்தில் தனது ஆவி பொருள் அனைத்தையும் அடகு


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

வைத்துவிட்டு இந்த உலகத்தில் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகி விடாமல் உண்மை வழியைப் பின்பற்றி உள்ளே கண்ட கனவை நிறைவேற்ற ஒவ்வொருவரும் அவரவர் உழைப்பையே ஆயுதமாகக் கொள்ள வேண்டும் என்பதையும் நூலாசிரியரின் கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன.

சித்தர் இலக்கியங்கள் என்ற தலைப்பிலான கட்டுரை சித்தர்கள் இலக்கியத்தை பற்றி புதிய புதிய தகவல்களை வழங்கி சிறப்பிக்கிறது. "பழந்தமிழர்களின் வாழ்க்கை, தத்துவம், வாழ்வு பற்றிய புரிதல், சுகாதாரமான வாழ்விற்கு அவர்கள் கையாண்ட இயற்கை மருத்துவ வழிமுறைகள், தமிழின்பால் அவர்களுக்கு இருந்த பற்று அதனை படைப்புகளாக வெளிப்படுத்திய விதம், தமிழர்களின் வாழ்க்கைத் தத்துவ ஞானம் ஆகியவற்றை தமக்கே உரிய தமிழ் மொழியை செழிப்போடு சித்தர்கள் பாடல்களில் எழுதி வைத்திருக்கின்றனர். மூடநம்பிக்கைகளைப் புறந்தள்ளி மடமைக் கருத்துக்களை வாழ்வில் இருந்து நீக்கி மனிதத்திற்கு முதலிடம் கொடுக்கும் அடிப்படையை ஒவ்வொரு மனதிலும் விதைக்கும்படியாக சித்தர்களின் பாடல்கள் அரங்கேறி இருக்கின்றன. சித்தர்கள் தங்களை அறிந்தோ அறியாமலோ சமய வெளிகளில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். அவர்கள் சமுதாய சிந்தனை சிற்பிகளாக வாழ்ந்தவர்கள். உள்ளமே கோயில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என உரக்கச் சொன்னவர்கள் உடலும் மனதும் ஒருமைப்பட்டால் பிறவிப்பயனை அடையலாம் என தங்கள் பாடல்களில் எடுத்துச் சொன்னவர்கள். அவர்களது பாடல்களில் எளிமையின் மிடுக்கும் இளமைப் பொலிவும் தனிப்பண்புடன் காணப்படும். இவை பழமைக்குள் புதுமையாகவும் புதுமைக்குள் பழமையாகவும் தோன்றுகின்றன. சித்தர்கள் சமய சமூக வாழ்வில் மரபாய் ஊன்றி இருந்த கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை தம் பாடல்களில் சாடி இருக்கிறார்கள். வைதீக சமயத்திற்கு எதிராகவும் அவர்களின் வழிபாட்டு முறைகளுக்கு எதிராகவும் மிகக் கடுமையாக எதிர்ப்பு குரல் கொடுத்தவர்கள் சித்தர்கள்" என்பதையும் இந்தக் கட்டுரை பதிவு

செய்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் சமய சிந்தனைகளின் ஆய்விலும் மருத்துவம் ரசவாதம் ஜோதிடம் வானியல் போன்ற யோகப் பயிற்சிகளிலும் பேராற்றல் படைத்த சித்தர்களது படைப்புகள் இன்றைக்கும் பல விதங்களில் பயன்படுவதையும் கட்டுரை பதிவு செய்கிறது.

தீவிரவாதம் தொடர்பான ஒரு கட்டுரையில் தீவிரவாதம் இந்த உலகத்திற்குக் கண்டிப்பாக தேவை என்று குறிப்பிடும் நூலாசிரியர் அந்த தீவிரவாதம் எப்படி இருக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை பின்வருமாறு வற்புறுத்துகிறார்.

மக்களுக்குத் தொண்டு செய்வதே அரசியல்வாதிகளின் வேலை என்பதை நிரூபித்துக் காட்டியவர் பெருந்தலைவர் காமராஜர். அவர் மறைந்து ஆண்டுகள் 50 ஆனாலும் இன்றும் அவரது ஆட்சிக் காலத்தை பொற்காலம் என்று பேசிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் அவரைப் பற்றிய கட்டுரையில் தன்னை ஒரு துறவியாக மாற்றிக் கொண்டு தலைவர்களை உருவாக்கித் தந்த மாபெரும் தலைவர் என்று நூலாசிரியர் அறிமுகம் செய்கிறார்.

ஒவ்வொருவர் மனதிலும் குறிக்கோளும் லட்சியமும் உயர்ந்ததாக இருக்கும் போதே அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்க உந்துதல் ஏற்படும். நினைப்பெல்லாம் நல்லதாகவும் உயர்வானதாகவும் இருக்கும் போதே லட்சியமும் குறிக்கோளும் எட்டி விட ஒவ்வொருவரது மனதையும் தூண்டி விடுகிறது.. தரங்கெட்ட கொள்கை கோட்பாடுகள் சுயநலத்தின் போக்கு சமூக கட்டமைப்பில் வர்க்க பேதங்கள் போன்ற பலவித தடைகள் ஒவ்வொருவரது வாழ்விலும் இடையூறு ஏற்படுத்தினாலும் குறிக்கோளை முழுமையாக எட்டுவதற்கான போராட்டத்தை தொடர்வதே மனிதனின் பிறப்பின் அவசியம் என்பதையும் நூலில் உள்ள நிறைய கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன.

இயேசு பிரான் தொடர்பான கடைசிக் கட்டுரை இந்த உலகில் சமாதானத்தின் தேவையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. வலிமைமிக்க ஆதிக்கத்தை, எளியவர்கள் மீது அது செலுத்தும் அடிமைத்தனத்தை, மதங்களின் பெயரில் உலகமெங்கும் நடக்கும் பேத பாகுபாட்டை விட்டுழித்து சமாதானத்தை உலகமெங்கும் பரப்புவதே இயேசுபிரானின் நோக்கமாக இருந்தது. அதை இந்தக் கட்டுரை முழுமையாக எடுத்துரைக்கிறது

தாய் நாட்டின் மீதான பற்று, மொழியின் மீதான நேசம், வளரும் தலைமுறை மீதான பாசம், இந்த உலகத்தில் வாழ்வதற்கான போராட்டத்தில் எப்படியெல்லாம் துணிச்சலும் வீரமும் விவேகமும் ஆக்கச் சிந்தனைகளும் அறிவின் வழியே வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கனவு, ஒவ்வொருவருக்குள்ளும் தன்னம்பிக்கையை விதைத்து விடுவதே தனது லட்சியம் என்ற நோக்கில் எழுதப்பட்டிருக்கும் இந்த கட்டுரைகள் நீதிநெறி வாழ்வியல் கட்டுரைகளாகவும் மானுடம் தழைப்பதற்கு உதவி செய்யும் கலங்கரை விளக்கமாகவும் அமைகின்றன..

## பிறப்பு,கல்வி

ஏப்ரல் 2, 1884 அன்று ந. மு. வேங்கடசாமி நாட்டார், தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் நடுக்காவேரி என்ற ஊரில் முத்துச்சாமி நாட்டார் தையலம்மாள் தம்பதியருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சிவப்பிரகாசம்.



அக்கால வழக்குப்படி உள்ளூர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்புவரை படித்தார். சிறுவயதில் வல்லம் குருசாமி வாத்தியாரிடமும் அவரது தம்பி கந்தசாமி வாத்தியாரிடமும் படித்தார். கந்தசாமி திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர். அவர்களிடம் நெடுங்கணக்கு இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று ஆகிய கணக்குச் சார்பான சுவடிகளைப் படித்து முடித்த பின்னர் தம் தந்தையார் மூலம்ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, அந்தாதி, கலம்பகம் வகை நூல்களையும் படித்தார்.

சாவித்திரி வெண்பா எனும் நூலை இயற்றிய ஐ. சாமிநாத முதலியாரின் தூண்டுதலால் ஆசிரியர் துணையின்றி தானே தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பிரவேசப் பண்டிதம் (1905), பால பண்டிதம் (1906), பண்டிதம் (1907) ஆகிய தேர்வுகளை எழுதி, முதல் மாணாக்கராகத் தேர்ச்சியுற்று வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் கையால் தங்கத் தோடா பரிசாகப் பெற்றார். வேங்கடசாமி மகா வைத்தியநாத அய்யரிடம் இசை பயின்ற தன் சித்தப்பா சொக்கலிங்க சிலநாள் கர்நாடக சங்கீதம் கற்றார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

## தனிவாழ்க்கை

1907-ல் அவருக்குத் திருமணம் நடந்தது. முதலில் புதுக்கோட்டைக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் தமது 24-ம் வயதில் திருச்சி எஸ்.பி.ஜி.கல்லூரியில் தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார். கோயம்புத்தூர் தூய மைக்கேல் மேநிலைப்பள்ளியில் தமிழாசிரியராக ஓராண்டு பணியாற்றினார். திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக 24 ஆண்டுகள் பணிபுரிந்தார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக ஏழாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சொந்த ஊருக்குத் திரும்பினார். தமிழவேள் உமா மகேசுவரனார் அவர்கள் விரும்பியவாறு கரந்தைப் புரவர் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் ஊதியம் பெறாமல் மதிப்பியல் முதல்வராகப் பணிபுரிந்துள்ளார்.

## இலக்கியவாழ்க்கை

அவர் செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், செந்தமிழ், ஆனந்த போதினி என 12க்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சைவம் தொடர்பான கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். அவற்றில் சில நூல் வடிவில் வந்துள்ளன. கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் உமா மகேசுவரனார் தூண்டுதலின் பேரில் நாட்டாரின் நக்கீரர் நூலையும், கபிலர் நூலையும் வெளியிட்டார். 'கபிலர்' நூலில் தமிழ்ச் சங்கம் பற்றிய விரிவான விளக்கத்தை முன்வைக்கிறார்.

வேங்கடசாமி நாட்டார் ஓய்வுபெற்ற பின் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கௌரவ முதல்வராக பணியாற்றினார்.திருச்சியில் இருந்த மூன்று கல்லூரிகளை இணைக்கவும் பழந்தமிழ் இலக்கியங்களை தனியாகப் படிக்கவும் ஓர் இலக்கிய அமைப்பை ஏற்படுத்தினார்.

திரு அ.வில்சன், தமிழாசிரியர்


### சொற்பொழிவாளர்

1915-ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் வேளிர் வரலாறு பற்றிச் சொற்பொழிவாற்றினார். தமிழகத்தின் பல ஊர்களில் சைவ சித்தாந்த சொற்பொழிவாற்றினார். 1930-ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியச் சொற்பொழிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிலப்பதிகாரச் சொற்பொழிவு (1931), கொழும்பில் அ.ச. ஞானசம்பந்தம் தலைமையில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவு (1939), கலித்தொகை மாநாட்டின் தலைமைச் சொற்பொழிவு (1941) என பல சொற்பொழிவுகள் ஆற்றினார்.

### விருதுகள், நினைவகங்கள்

வேங்கடசாமி நாட்டாரின் சொற்பொழிவாற்றலுக்காக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் டிசம்பர் 24, 1940-ல் நடத்திய மாநாட்டில் நாவலர் எனும் பட்டத்தை வழங்கியது.
இவரது நினைவாக தஞ்சாவூரில் 1992-ல் நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி நிறுவப்பட்டது.
1944-ல் வேங்கடசாமி நாட்டாருக்கு கோவில் கட்டினர்.

### நூல்கள் பட்டியல்




- வேளிர் வரலாறு (1915)
- நக்கீரர் (1919)
- கபிலர் (1921)
- கள்ளர் சரித்திரம் (1923)
- கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் (1926)
- சோழர் சரித்திரம் (1926)
- கட்டுரைத் திரட்டு
- சில செய்யுள்கள்

**நூல்கள் பட்டியல்**

- காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது
- உரைகள்
- அகநானூறு
- இன்னா நாற்பது
- களவழி நாற்பது
- கார் நாற்பது
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை (1941)
- கொன்றை வேந்தன் (1949)
- உலகநீதி (1949)
- மூதுரை (1950)
- ஆத்திசூடி (1950)
- நல்வழி- ஔவை (1950)
- நன்னெறி (1952)

**மறைவு**

வேங்கடசாமி நாட்டார் மார்ச் 28, 1944-ல் காலமானார். அவரது உடலை நடுக்காவிரி குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் கோவிந்தராஜ் நாட்டாருக்குச் சொந்தமான இடத்தில் அடக்கம் செய்தனர்.

நாளை நமதே

# மனதில்

# வலிமை இருந்தால்

# துன்பமும்

# இன்பமாய் மாறும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com